செய்தி வெளியீடு எண் : 1797 நாள் : 13.10.2022

# 2021–2022 ஆண்டிற்கான மாவட்ட அளவிலான சிறந்த தொழில் முனைவோர்களுக்கான விருதுகளை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் வழங்கினார்கள்

மாநிலத்தில் சிறப்பாகச் செயல்படும் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களையும் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்கி, இந்நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த வங்கிகளையும் அங்கீகரித்து, ஊக்கப்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கி வருகிறது. 2021–22 ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான விருதுகள் 16.09.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, 2021–2022 ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான தொழில் நிறுவனங்ளின் சிறந்த தொழில் முனைவோர்களுக்கான விருதுகளை, தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன் அவர்கள் இன்று 13.10.2022 கிண்டி சிட்கோ அலுவலக கூட்ட அரங்கில் 38 மாவட்டங்களை சேர்ந்த 40 தொழில் முனைவோர்களுக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலர் திரு. வி. அருண்ராய் இ.ஆ.ப., தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திருமதி. சிஜி தாமஸ் வைத்யன் இ.ஆ.ப., சிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி. சோ. மதுமதி இ.ஆ.ப., தொழில் வணிக கூடுதல் ஆணையர் திருமதி. கிரேஸ் லால்ரிண்டிக்கி பச்சாவ் இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in